உ

வேலுமயிலுந்துணை

கோயமுத்தூர் ஜில்லா பெரிய தாராபுரத்துக்கடுத்த
சின்னப்புத்தூரில் எழுந்தருளிய

திருமலைசாமி மகிமைச் சிந்து.

முதல் பாகம்.

இஃது

தாராபுரம் தாலூகா கொந்தல்ரேவ் கிராமம் மோளசப்பட்டியி
லிருக்கும் செட்டிமை மகா ா-ஸ்ரீ இராமசாமி செட்டியார்
குமாரனும் நாகப்ப செட்டியார் மருமகனுமாகிய
மோடி பீதாம்பர

முத்துசாமி செட்டியார் அவர்களால்

இயற்றப்பட்டு

ஷை தாலூகா வேலாயுதம்பாளையம் கஸ்பா போர்டு ஸ்கூல்

சு. ராமசாமி உபாத்தியாயர் அவர்களால்

பார்வையிடப்பட்டு

[illegible]ன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

1924. [அணா 2

காப்பிகள்—1000

OFFICE OF THE REGIST...
15 DEC 1924
1550
926:38.2118 S8
N24
181302
256

உ

கடவுள் துணை.

வெண்பா.

விநாயகர் துதி.

தந்தாவளத்தானை சாயசுரர் வேலவன்முன்
தந்தாவளத்தானே தான்காப்பே—தந்தாவா
அத்தானை நுண்ணிடையின் ணாண்கவுசலே அணைகேள்
ளத்தானை வாழ்த்து மொழிக்க.

மாதவர்குலத்திலுதித்த என்ற மெட்டு.

திருவருள் கொங்குமண்டலம் - என்னும் - சிறந்த பொன் குலுக்கிநன் ஞடதனில், மருவருள் பூந்தடமும் - தெங்குபுன்னை மகழுகிர் அகில்பல மாமரமும், நிறை நிறை வளர்ந்தோங்கி - முகிலின - நித்நினுங் கண்ணுறங்கிட வித்தகமாக, பொருவிள மிக வுலவும் - தாரா - புரமெனும் தலைநகர் தன்னில்மிகு, சோலைசூழ் சின்னப்புத்தூர் தன்னில்வளர் சுந்தரஞ்சேர் கர்ணம் சாமய்யங்கார் மாலையனுதினம்பணிவோர் - அவரிட - மனைவிரதியணைய ரூபவதி, தாலையனு தினமோதுவாள் - நெறிவழுவாள் - நுண்ணிடையாள் பேடைஅன்னநடையாள், வாலைப்பருவமுடையாள் - அருந்ததி மதித்திட கற்பிற்மிகு குணமுடையாள், தாயம்மாளெனும்போாள் தன்னுடனே தாரணியோர்புகழ வாழ்நாளில், மாயவன் தன்னரு ளால் - கற்பம் - மங்கை வயிற்றினிலுதித்திடவே, கேயமுடனே மறையோன் - மனைதனில் நித்தியஆனந்தஹரி பஜனைசெய்து சுயாசமும்புரிந்து அன்னதானம் கணக்கில்லாமலேசெய்து கார்த் திருந்தார், இந்தவிதமாய் மறையோன் - இருந்திட - ஈரைந்து மாதக்கெற்பம் நிறைந்திடவே, அந்தமிகு தாயம்மாள்தன் - வயிற் றினில ஆண்ஜெனனசுப தினந்தனிலே, சுக்திரமசமகவு பிறந்திட சூழ்ந்தவர் சுற்றத்தார் மற்றுள்ளோரும், வந்தருகில் நெருங்கியே தான் - மஞ்சபீர் - வார்த்து சக்கரைதானம் வழங்கியபின் ஹரியரு ளாலுதித்த - மைந்தனுக்கு - அன்னை தந்தை உறவினர் யாவரும்

கூடி, நெரிவழி தவசாமலே - பெயரிட - நக்ஷயத்து தாய்மாமன் மடிமேல்வைத்து திருமலைசாமியென்றே-மூன்றுதரம்- செப்பிடத் தாய்தகப்பன்ஒப்பியேதான் அருமையாய் வளர்த்துவர வயதாய் ந்திட மூன்று திங்கள் ஆனதின்பின் கையிற்றிட்டி வலையவிட்டு அன்னையுமே காதலுடனே வளர்த்து வருநாளில் ஒய்யாரமாய் குழந்தை கைதனை ஒன்றுடனே ஒன்றுதாக்க வளைநெரிந்து தையலுக்குந் தோற்றுமல் மேற்புருவம் தன்மீதி காயமது தாக் கிடவே பாலகனும் கதரியழவே தாயம்மாள் பார்த்து திகைத்து கண்ணீர் உதிர்த்திடவே, சீலமுள்ள மாமறையோன் கண்டெழு ந்து சிவன்மலையாண்டவனை சிந்தனைசெய்து, காலனைக் காலா லுதைத்த சிவபெருமான் கண்டுமகிழ்ந்திடவடி வேலெடுத்த கோலமயில் வாகனனே - எந்தனிட - குழந்தைகண் புருவத்தில் காயமதில் உதிரமது ஒழுகாமலே கார்த்திடுவாய் உன்னுடைய சன்னதிக்கிப்போதேவருவேன் என்று விபூதியெடுத்து, தொழு திட்டிடவே ரத்தமது அற்றனவே. தனனத்தம் தனதனனு.

வெள்ளிமலை யோத்தபலமேடை என்றமெட்டு.

சிவன்மலைக்குப் போய்வருவோமென்று ஐயர்
செப்பிடவே தாயம்மாளும் அன்று மலர்
சிந்தைமிகவு மகிழ்ந்து சுந்தரனையே புகழ்ந்து
சோர்ந்தாள் மனந் தேர்ந்தாள்,

பாவவினை தீர்ந்ததென நடந்தாள் கண்டு
பாவை பின்னே சென்று ஐயர் தொடர்ந்தார் மற்ற
பந்தமுள்ள மைத்துனரும் வந்தனர் அநேகரோடு
கூடி வழி நாடி.

சிவன்மலையைக் கண்ணினுலே கண்டார் எல்லாம்
சிந்தை மகிழ்ந்தானந்தமுங் கொண்டார் நன்றாய்
சீக்கிரம கங்கைநீராடி வாக்கினுல் குகனைப்பாடி
சென்றார் வாவா என்றார்

ஆவலுடன் ஸ்தானிகரை யடுத்து வேண்டும்
[illegible]ஷேத்திரமான்களைக் கொடுத்து நன்றாய்

181302

அர்ச்சனைகள் செய்யுமென மெச்சிட்டப்பொன் காசு கையில்
அளித்தார் மனங் களித்தார்

சோடச அபிஷேகமு முடித்து எல்லா
தொல்வினை துலைந்ததென நடித்து கோவில்
சுற்றிவா மற்றவரும் நற்றவரி வரேயெனச்
சொல்வார் உடன் செல்வார்

தீப ஆராதனைகள் செய்ய ஐயர்
சீக்கிரமாய் தட்டதனைத் துய்ய இரு
செங்கரத்தினால் எடுத்து பொங்குசிசுவாராதனை
செய்தார் கண்டோர் வெய்தார்

ஸ்தானிகரே என்னபுத்தி நில்லு சுவாமி
தானெங்கு இருக்கிறார் நீ சொல்லு இந்தத்
தையல் கையில் ஏந்துசிறு பையனுக்கு தூபதீபம்
தந்தீர் இனி மூந்தீர்

என்று அங்குள்ளோரெல்லாம் ஏச ஐயர்
ஏங்கியே மதிமறந்து கூச பின்னும்
ஏகமுதலான பொருள் நாகசயனன் இவரே
என்று சிவ னன்று

தூப ஆராதனைசெய் முன்னே என்று
சுருக்காகத் தள்ளிவிட்டார் என்னே ஆதி
சுந்தரற்கு தூபதீபம் தந்தனன் மூர்த்தியென
மொழிந்தார் மனங் கனிந்தார்

சக்குசக்ரபாணியென எங்கும் ஞான
தற்பரனாய் வந்துதித்தாரிங்கு என்று
சாற்றிடவே அங்குள்ளோரும் போற்றினர் பாலனடி
தன்னைப் பெற்ற அன்னை

சிவமே யீதென்னமாயம் என்று ஐயர்
சிந்தை மகிழ்வோடு வாவாய மென்று நன்றாய்த்
தேவனடியைப்பணிந்து போவோம் நன்னகர்க்கெனவே
சேர்ந்தார் மனந் தேர்ந்தார்

சிருவனுடன் யாவருமே கூடி வாடும்
சின்னப்புத்தூர் என்னும் நகர்நாடி பாலன்
செய்தசோதனைமறந்து துய்யமகவினுடனே
சேர்ந்தார் வாழ்ந்தங்கிருந்தார்.

விருத்தம்.

இப்படித் தந்தைதாயும் இயல்புடன் குழவிதன்னை
ஒப்பியே வளர்க்கப்பாலன் ஒளிர்பிறை போல்வளர்ந்து
செப்பிய வயதுஐந்து சிறந்திட தந்தை தாயும்
தப்பிலா மகவைப்பாடசாலையில் சேர்த்திட்டாரே.

பாளைவாய் கமுகு என்ற மெட்டு.

திருவருளால் வந்த மைந்தன் பருவவயதைந்தாகிட
தேவிதாயம்மாள் ஆனந்தங்கொண்டுமே பள்ளி
மேவியே உபாத்தியாயரைக் கண்டுமே.

வாருமையா என் குழந்தை வருடமைந்து ஆனதாலே
வள்ளலைப் பள்ளியில்வைக்க வெண்ணியே இன்று
ஒள்ளிய தினமென்றும்மை நன்னியே.

அழைத்துவந்தேன் உன்றன் பிள்ளை களைத்திடாமல் பாதுகார்த்து
அருமறைகள் யாவும் தவராமலே பொல்லா
கருவமதெப்போதினும் வாராமலே.

ஓதிவைப்பீரென்றுசொல்லி மாது அரண்மனைக்கேக
உத்தமன் பாலன் முகத்தைப்பார்த்துமே ஞான
சத்துள நினைவே மனம் வேர்த்துமே

தெள்ளுதமிழ் யாவும்நிதம் கள்ளமில்லாமலுரைக்க
தேசிகன் வடிவுகொண்ட பாலனும் சற்றும்
கூசிடாமல் கற்றுனனுகூலனும்

ஏழுவயதாகியொரு நாளுமே பள்ளிவிட்டு
எங்கினும் சென்றிட நன்று ஓடியே தெருவில்
தங்கிப சிறுவனுடன் கூடியே

பந்துவிளையாடவெண்ணி சந்துவழியாகச்சிறு
பசகளுடன் கூடிவிளையாடவே பந்து
ஐயர்தன் கிணற்றருகே ஓடவே

எந்தவிதமாகிலுமே பந்தையெடுப்போமெனவே
சந்தோஷமாய் ஓடிடக்கல் தட்டியே கிணற்றில்
வந்துவிழுந்தான் கரணம் கொட்டியே

திருமலைசாமியெனும்பேர் யாவரும் தெளிந்திடவே
திப்பெனக் கிணற்றினுள்ளே வீழ்கவே சிறுவர்
அப்புறம் பார்த்திட நீருள் மூழ்கவே

ஐயரும்கிணற்றில் வீழ்ந்தார் மெய்யையிது தாயாரிடம்
யாராகிலும் சொல்லிடாதீர் என்றுமே சொல்லி
நேராகவே வீட்டினுக்குச்சென்றுமே

தங்கள் தங்கள் மாளிகையில் இங்கிதத்துடனிருக்க
மங்கை தாயம்மாள் மகனை நாடியே இன்று
இன்னும்வரக்காணோமென வாடியே

எப்போதும் இரவிமறைந்தப்போதே வருவானின்று
என்னமோ இன்னமும் வரக்காணனே எந்தன்
மன்னவா சென்று நீபார்க்கவேணுமே.

என்றுமாது சொல்லியங்கு நின்றுபுலம்பிட ஐயர்
சென்றுதெருவெங்கினுமே தேடியே பொழுது
அன்றுபோகத் தன்மனது வாடியே

வந்துமைந்தன் இல்லையெனச் சிந்தைநொந்துரைக்கமாதின்
தந்தைமற்றோரெல்லாம் ஒன்றுகூடியே ஊரில்
சந்துமனைதோறும் சென்று தேடியே

இத்தறியில் நாழிகையும் பத்துடன் ஐந்தாகிடவே
என்னசெய்வோமென்று மனதேங்கியே மறையோன்
தன்னையும் இருகையாலே தாங்கியே

மாளிகையில் கொண்டுசென்று மங்கையுடன் ஐயரையும்
வண்ணவுரைசொல்லி மனம் தேற்றவே ஐயர்
அண்ணலை நினைத்துதுதி போற்றவே.

வெய்யவனுதித்திடலும் துய்யசிறு பாலரெல்லாம்
வீதிவழி வந்திட கண்டோடியே அந்த
ஆதிமறையோனவரை நாடியே

எங்கள் மைந்தன் உங்களுடன் வந்துவிளையாடினனே
எங்கேயென்று பாலர்களைக் கேட்டிட மைந்தர்
எங்கியே மறையோக்குண்மை யூட்டிட

கிணற்றினில் விழுந்தானெனவே கேட்டவுடன் அவ்வூர் நாய்க்கர்
கணத்தினில் பாலனைக்கையா லேந்திடுய அன்பாய்
குணத்துடன் காலால் ஜலத்தை நீந்தியே

பாலனைமேல் கொண்டுவர காலனுயிர் கொண்டுபோன
சீலனைக்கண்ணினுல்கண்டு யாருமே இந்த
கோலமென்ன உயிர்மரித்தான் பாருமே

என்றுபலரு முறைக்க கன்றுபோல் கதரிஅன்னை
சென்றுமைந்தனைக் கரத்தால் தாங்கியே இது
அன்றுசெய்த குறையென ஏங்கியே

தரையினில் விழுந்து அன்னை குறைதவிர்த்திடவே வந்தாய்
உரைசெய்குவா யென்றுமனம் வாடியே அள
அருகிலுள்ளோர் யாவர்களும் கூடியே

ஆண்டுஆண்டுதோரும் நீங்கள் அழுதுபுரண்டிடினும்
அன்னையே மாண்டார் வருவதின்றினி மைந்தன்
தன்னையுந்தகனம்செய்தல் நன்றினி

என்று மறையோர்களெல்லாம் ஒன்றுகூடி யேமயான
மேகுவோம் மைந்தனையெடுத் தென்னவே அன்னை
சோகமதை நீக்கமைந்தன் துன்னவே

அரியரோ வெனவே மைந்தன் பெருவிரல்தனையசைத்து
யாவரும் பார்த்திட எழுந்தானரோ தேவா
மூவரும் புகழ்ந்து பாடினரோ

மைந்தனெழுந்தானெனவே தையலு மனமகிழ்ந்து
கையினுல் வாரியெடுத்துக்கொண்டுமே தங்கள்
துய்ய அரண்மனைதன்னிற் சென்றுமே

நித்தியம் ஹரியைப்போற்றி பத்தியாய் வாழ்ந்திடுநாளில்
புத்திரனுக்குவய தீரைந்துமே வர
சித்தபிர்மை கொண்டுமனம் நைந்துமே

ஆட்டுக்காரப்பயல்களிடம் கேட்டுப்பால் கறந்துகொஞ்சம்
காட்டிடுவாரேயதிகமாகவே அவர்க்கே
ஊட்டிடுவார் பின்னுமிதமாகவே

மண்ணெடுத்துச் சக்கரைப்பால் உண்ணுமெனபாலருக்கு
தன்னருளாலே கொடுத்து ஆடியே பின்னும்
கண்ணனை நினைத்துப்பதம் பாடியே

இந்தவிதமாய் நடக்கும் அந்தரங்கம் கேட்டுமையர்
சிந்தைநொந்து வாடுதல்கண்டோடியே உந்தன்
புந்தியின்படிநடப்பேன் நாடியே

விருத்தம்.

நடக்கிறோம் என்று பாலன் நவின்றிட ஐயர்தானும்
திடத்துடன் கணக்குவேலை செய்யென ராஜீநாமம்
கொடுத்திடப்புவியோர் மெச்ச குறிப்புடன் கணக்குவேலை
துடுக்குடன் செய்துவந்த சுருதியைக் கூருவேனே

தெம்மாங்கு.

புத்தூரிலேயிருந்து புகழ்ந்திடவே கணக்குவேலை
சித்தமகிழ்வுடனே செய்துவருங் காலத்திலே
அற்புதம் கலியுகத்தின் நற்பதம்
பெற்றிடலாம் அவர்தன் பொற்பதம்
பத்து இருமூன்று பர்வ வயது ஆகிடவே
உத்தமன்றனக்கே மணம் உருதியதாய் முடித்திட்டாரே (அற்)

சித்தேசனன்றதிபோல் சேர்ந்துயிருபேருகளும்
சத்தியநெரி தவருமலே தாரணியில் வாழ்ந்திருந்தார்

உத்தமியாள் வயிற்றில் ஓர்மகவுதித்தபின்பு
பத்தியுடன் இருந்து பரமபதம் சேர்ந்தனளே

சேர்ந்தபின்பு ஐயர்தானும் திகைத்துமனம் களைத்திடவே
சோர்ந்தபணிவிடைக்கோர் கோதைதனை தேடினரே ;

மலப்பாளையத்தில்வளர் மாமணிடதன்மகளை
நிலையாகக்குறித்துமணம் நேர்த்தியதாய் முடித்திட்டாரே

கமுசலநாட்சேரியிட கனவனெனப்பேருபெற்று
அமுசமுடன் வாழ்ந்திருந்தார் யாவரும் புகழ்ந்திடவே

கணக்கில்மிகு தீரரென கவர்னர்முதலோர்மகிழ
வணக்கமுடன் குடிகளையே வளர்த்துவரும் காலத்திலே

கச்சேரிதன்னிலோர்நாள் கலெக்டர் பைசலிலே
அச்சமில்லாமல் நின்று ஆழ்ந்துகரத்தேந்தினரே

பார்த்துத் துரையவர்கள் பைத்தியமோ இவனுக்கென
ஆர்த்து உரைத்திடவே ஐயாங்கே யேதுசொல்வார்

எனது கிராமத்திலே இருந்திடும்ஓராண்டிப்பையன்
மனந்துணிந்து இலைபரிக்க மரத்தின்மீதேறினனே

எவ்விதமோ கால்நழுவி இடரியவன் விழும்பொழுது
செவ்விதழ்வாய்திறந்து திருமலைசாமியென்றான்

கூவியழைத்தவன்றன் குறைதவர்க்க எனதுகையால்
தாவிப்பிடித்தேனென்று சாற்றினரே தற்பரனும்

கேட்டவுடன் கலெக்டர் கிட்டிருந்த சேவகரை
ஓட்டமுடன்சென்றுஇதன் உண்மையறிவீரெனவே

என்றுரைக்கச் சேவகர்கள் ஏகியதான் வேகமுடன்
அன்றுநடந்தசேதி அறிந்துவந்து உண்மையென்றார்

அந்த அதிசயத்தை ஆராய்ந்து துரையவர்கள்
உந்தனுக்கு கணக்குவேலை உதவாதினிதக்கென்றார்

நம்பினமேல் லாவணமும் தந்திடுவீரென்றனுமே
நம்பிப்போதேஐயர் ராஜீநாம் கொடுத்திட்டாரே

இன்றுமுதல்நமக்கு இல்லறம் வேண்டாமெனவே
தோன்றுமனத்தினராய் சுத்தப்பிர்மமாகினரே

தந்தைதாயை வணங்கி சத்திரமொன்றெநந்தனுக்கு
சிந்தைமகிழ்வுடனே செய்துவைப்பீர் என்றனரே

மைந்தன்மொழிப்படியே தாபிதா மகிழ்ந்து
விந்தைமிகுசத்திரமே விளங்கிடவே கட்டிவைத்தார்
சப்ரமஞ்சக்கட்டிலுடன் சாலுவைத்தலைக்கணையும்
செப்பமுடன் ஐயருக்கு சேர்த்துவைத்த சேயழகாய்
கண்டுமகிழ்ந்து சுவாமி கண்ணிதமாய்ச் சத்திரத்தில்
பெண்டுபிள்ளைதன்னைநீக்கி பெருமானும் வீற்றிருந்தார்

சத்திரத்தில் வந்திருக்க சகலஜனம் சூழ்ந்திருக்க
அத்தனை பேர்களுக்கும் அன்னதானம் கொடுத்திட்டாரே
பின்னும் அடியார்க்கு பிலாக்கதலி அறுசுவையும்
உண்ணுமெனக்கொடுத்து ஓர் அதிசயமும் காட்டினரே
முன்னாளிலேமரித்த மொய்குழலால் மனைவியுடன்
பன்னகசயனனுமே பள்ளியுறக்கண்டனரே

இதுவென்ன அதிசயமோ என்றடியார் வினவிடவே
சதுர்மறையோனதை மறைக்கசார்ந்தான் கங்கையருகே
அரியரோவெனமொழிந்தே ஐயர் ஜலத்துள்ளிரங்கி
துரிதமுடன் வேரோகங்கைதோய்ந்தெழுந்தார் அச்சமயம்
கங்கைதனிலிருந்து கனிவாயெழும்பொழுது
செங்கைதனில் சங்குசக்ரம் தெரிந்திடவேபார்த்தனரே
பார்த்தஜனங்களெல்லாம் பரமனிவன்தானெனவே
கார்த்தருள்வீரனவே கைகூப்பி நின்றனரே

வணங்குமடியாருடனே வந்துசத்திரம்புகுந்து
மணக்கமழும் மஞ்சமதில் வாகுடனே வீற்றிருந்தார்
இவ்விதம் சின்னாளிருந்து ஏகாந்தமாயொருநாள்
பவ்வமெனவடியரெல்லாம் பரவிவரவேயழகாய்
சிருலவும் பொன்னுபுரம் செருமஸ்தாவதனில்
கூருமடியாருடனே கூடியுலாவினரே

திட்டமுடன் அவ்விடத்தே சிறப்பாய் வளர்ந்தோங்கும்
மெட்டக்கல் விசாலமாம் மோதியரர்ந்திடவே
பென்பூதமொன்றெழுந்து பேழவாய் தனைத்திறந்து
கண்பார்த்தெனையிணவாய் காருத்தாவென்றெனவே

என்றழகு சொன்னவுடன் ஏகுவாய்நீ யாமதுரை
மன்றல்கயல்கண்ணி மங்கைசன்னதிதன்னிலே
வந்துனக்கு மனமகிழ மாலை தரிப்பேனென்றே
சுந்தரனும் வாய்திறந்து சொல்லி நடந்தனரே
பின்தொடர்ந்த நேயரெல்லாம் பெருமானேயுன்னிடத்தே
அன்புடனே பேசினது யாரோ அறியோமென்றார்
நன்பர்களே கூறுகிறேன் ராமாவதாரமிதில்
பண்பில்லா ராவணன்றன் பாவிதங்கை சூர்ப்பநகி
தண்டகாருண்யமதில் சார்ந்துயெனைச்சேரவென்று
விண்டகுறைக்குபதில் விளம்பியமுறையிதென்றார்
இன்பமுடன் அன்பருக்கு இயம்பியதைமறைக்க
அன்புடனே மாமதுரை யான்போகவேண்டுமென்றார்

விருத்தம்.

சுந்தரத் தோளமாரே சொக்கர்தங் கோவிலுக்கு
விந்தையாய்ச் செல்லவேண்டும் வித்தகமுடனே யங்கு
தந்திமாமுகன்றன் கோவில் தாபிதம்செய்து சர்க்கரை
முந்தியே தானம்எய்தல் முறையென மொழிந்திட்டாரே.

சந்தக்கும்மி.

சத்திரத்திற்கு முன்பாக விநாயகர்
சன்னதியொன்றுமே தானமைத்து
மித்திரபேத மனுகாமலேவீர
பத்திரரையங்கு காவல்வைத்து.

காளியெனும் பறயன்றனைக்கூவியே
கணபதிக்கே பிரதிஷ்டைசெய்ய
தாளிச்சகாயமாய் நமதுகிராமத்தில்
சொல்லிப்பறையை அரையுமென்றார்,

அந்தமொழி தவறுமலேசாம்பன்
அடித்திடக்கேட்டோ ரானந்தமதாய்
வந்தஜனங்களின் தொகையுரைக்க அங்கு
வாய்க்காது ஆதிசேடன்றனும்:

கண்டுமகிழ்ந்து திருமலைசாமியும்
கரிமாமுகவன்றனைப் பணிந்து
மண்டலமெங்கும் புகழ்ந்திடச்சக்கரை
வழங்கிடவேண்டு மெனநினைத்து.

கங்கையில்மூழ்கி யிடையிற்பீதாம்பரம்
கட்டிவிநாயகன் முன்புவந்து
செங்கையில்விபூதி தனையெடுத்தேயங்கு
சேர்ந்தவர்க்கெல்லாம் கொடுத்திட்டாராம்.

[illegible] கைநிறையவெள்ளை
மங்காதசக்கரை யாயிருக்க
நீங்காதஆனந்தங் கொண்டுஅரியரோ
நின்மகிமையென்றார் அன்பர்களே.

இந்தவிதமாக வந்தஜனங்களுக்
கெல்லாம்தவறுமலே கொடுத்து
அந்தரங்கமாக சிலநாய்க்கப்பட்டி
அம்பிகாக்கவுண்டரைத் தானழைத்து

சுற்றிலுமுள்ள ஜனங்களும்பார்த்திடத்
துய்யமண் பாண்டந்தனையெடுத்து
ஆற்றியதனிடம் மூவிரல்சர்க்கரை
நாடிஎடுத்திட்டார் அன்பர்களே.

சர்க்கரையிட்ட கலசந்தனக்குமே
பக்குவமாய்க் காவிச்சேலையிட்டு
தக்கமனதுடன் கட்டியேதேவக்காள்
தன்கைகொடுத்திட்டார் அன்பர்களே.

இக்கலசந்தனை மாதமொருமுறை
எர்க்கவரும் அமாவாசைதனில்
அக்கறையாக எனை நினைத்தே பூசை
அன்புடன் செய்யென்றார் அன்பர்க[illegible]

189302

பின்னும் அவ்வூர் பண்ணுடி பெயர்கொண்ட
பெரியமனிதனும் ஒருவனிடம்
அன்னுகூர்ந்தற்பனே தன்விதை ஒன்றினே
சுந்திரமாகவே கைகொடுத்து

இவ்விதைதன்னே இவ்வூர்க்குலுக்கத்தோட்டம்
தின்பமுடன் கொண்டுபோய் காட்டி
செவ்வியதண்ணீர் விட்டன்புடனே பயிர்
செய்திடுவாயென்ருர் அன்பர்களே

இவ்விதம் சொல்லி அங்குள்ளோர் அறிங்கிட
வருமவடை பாய்துவபகமகனவே
செவ்விய வாய்திறந்தங்குள்ளோரிங்கு என்று
ச்சருவதென்றன ரன்பர்களே

மண்கலசந்தன்னில் இட்ட சர்க்கரை
வண்ணமுடனே நிறைந்திடவும்
கண்காணத்தந்த கூந்தற்பனே பூரித்து
கைக்கடங்குமளவாகுமந்த

காலந்தனிலிக்கு யான்வருவேனென்
கண்டுகொள்வீரெனச் சொல்லிமிகு
கோலமுறும் தனதன்னே தந்தைவளர்
கொற்றமனேசென்ருர் அன்பர்களே

தந்தன தானுனே தனனம் தந்தன தானுனே.

மாமதுரைக்கேக தந்தைதாயை
நேமமதாய்ப்பணிந்து
நேமமதாய்ப்பணிந்து விடைதா
தாமதமாய் நடந்து

நடந்தார் நாயகியுடன் மாமிமாமன்
தொடர்ந்தார்பின் அன்பருடன்
தொடர்ந்தார்பின் அன்பருடன் பழனியை
கடந்தார்களின்பமுடன்

ஸைகைக் கரைபடுக்து யாவர்களும்
    பொய்கைதனிற் குளித்து
பொய்கைதனிற் குளித்து நன்றாய்
    அய்யர் மனம் களித்து

நான்மாடல்கூடல்தனில் உதித்த
    நாயகன் றாள்பணிந்து
நாயகன்றாள்பணிந்து ஐயர்
    நேயமதாய் நடந்து

அம்பாள் திருக்கோவில் தன்னை
    ஆவலுடன் அடுதது
ஆவலுடன் அடுத்து திருமந்திரம்
    நாவதிற்படித்து

ஐயர் தனையழைத்து அம்மனுக்கு
    அமுதுபடிகொடுத்து
அமுதுபடிகொடுத்து திருக்கொலு
    சமுகமதை யடுக்து

இருக்கும்பொழுதில் அங்கு முன்குறை
    பெருக்கவிழிதிலங்கு
பெருக்கவிழிதிலங்கு நடனம்
    புரிந்திடும் மாது அங்கு

மாசிக்கெதருவில் வ்ளர் ஒரு
    தாசிதன்பிள்ளையொடு
தாசிதன் பிள்ளையொடு அம்மனை
    பூசிக்க இன்பமொடு.

கொந்தார் குழலணங்கு திருக்
    கோவிலும் முன்பு வந்து
கோவிலின் முன்புவந்து அம்மனை
    மேவியே தாள்பணிந்து

மங்கையாளங்கிருக்க சுவாமி
    மனதுமிகக்களித்து

மனதுமிகக்களித்து ஸ்தானிகரை
  இணமெனவேயழைத்து
அய்யாள திருக்கரத்தாள் மலர்மாலை
  ஆனந்தமாய்தருவாள்
ஆனந்தமாய்தருவாள் மெய்ஞான
  யோனந்தமே பெருவாள்

என்று உரைத்திடவே ஸ்தானிகர்
  நின்று திகைத்திடவே
நின்று திகைத்திடவே அம்மன்
  நன்றென நகைத்திடவே

அண்ணனுக்கென்று மணம் நமது
  ஆலயத்தில் முடிக்க
ஆலயத்தில் முடிக்க முன்சொன்ன
  காலம்போலவே நடக்க

வேணும் எனநினைத்து அங்குள்ள
  வேதியர் தாம்காண
வேதியர்தாம்காண ஆதி
  மாதிவள் தான்பூண

மந்தாரம் பிச்சிகொன்ற அடுக்காய்
  வைத்துக்கட்டும் அலங்கள்
வைத்துக்கட்டும் அலங்கள் எந்தனிட
  மைத்துணி மார்பிலங்கள்

தந்தேன் மலர்மாலை என்று
  சார்த்தியே தட்டில் வைக்க
சாத்தியே தட்டில்வைக்க ஐயர்
  போற்றியே கைகொடுக்க

திருமலைசாமியுமே மகிழ்ந்து
  திருக்கரத்தாள் வாங்கி
திருக்கரத்தாள் வாங்கி ஜலுதாம்
  மருப்படாமல் ஓங்கி

கமலம்பாள் தன்கழுத்தில் யாவர்களும்
　　கண்டிடவே யணிந்தாள்
கண்டிடவே யணிந்தாள் ஞான
　　பண்டிதரும் புகழ்ந்தார்
தேவ வாத்தியம் முழங்க மலர்மாரி
　　தேசிகன் மேற்பொழிய
தேசிகன் மேற்பொழிய அறிஞர்கள்
　　ஆசீர்வாதம் மொழிய
பெற்றிடும் அன்னையரும் கண்டு
　　பேரின்பம் மூழ்கிடவே
பேரின்பம் மூழ்கிடவே சுவாமி
　　வாவென்று கூவிடவே
கமுசல காட்சியரும் கமலாம்பாள்
　　கன்னியர் பின்னுறவே
கன்னியர் பின்னுறவே மற்ற
　　அன்னியர் பின்னுறவே
கோவில் மேளம் முழங்க மாதர்கள்
　　கூடியே முன்னடிக்க
கூடியே முன்னடிக்க கவிஞர்கள்
　　பாடிப்பதம் படிக்க.
பட்டுக்குடைகவரி சுருட்டி
　　பக்தர்கள் கைப்பிடிக்க
பக்தர்கள் கைப்பிடிக்க ஞான
　　உத்தமன் முன்னடக்க
கூடித்தெருவில் வா தோட்டி
　　கொம்பினையூதிடவே
கொம்பினையூதிடவே நம்மை
　　நம்பினோன் றுனெனவே
ஐயர் மனதிலெண்ண அங்குள்ளோர்
　　யாரிவன்றுனெனவே
யாரிவன்றுனெனவே என்னிட
　　ஊரிவன் றுமெனவே

சாமியுரைத்திடவே மகிழ்ந்து
சகலர்களும புகழ்ந்தார
சகலர்களும் புகழ்ந்தார் கமலாம்பாள்
அகமதிலே புகுந்தார்.

நிலமெண்டலீகா ஆசிரியப்பா.

மங்களம் பொருந்தும் மதுரையாநகரில்
மங்கையாள் மனையில தங்கியேயிருந்து
சங்குசக்கரத்தோன் எல்லோரும் புகழ
சக்களை வழங்கி முக்கிய கருததாய்
விடையது பெற்று கடைதமெதருவழியே
அன்னகர் கடந்து கனனல்சூழ்துயவ
நன்னகரடைந்து நயமிகு தோப்பில்
தங்கியேயிருக்க அங்குள குயவன்
இங்கிதமகமெவான் றிவரிட மனுகிட
அன்புடன் அழைத்தே ஆவலாய் மிக்க
என்பெயர்சொல்லி இத்தேவதைக்கு
அன்புடன் பூசை ஆவலாய்ப் புரியென்
றின்பொடு புகன்றிட இன்னுமோர் சிறுவன்
கங்கைதன்னுள் குலத்திற் றுங்கவேயுதித்தோன்
கொங்கார் வெள்ளக் கோவிற் காணியான்
ஆர்த்திடு மாந்தை கோத்திரத்துய்மன்
பார்த்துமே ஐயன் பதமலர் பணிய
கிட்டவேயழைத்து இஷ்டமதாக
சிட்டர்கள் புகழ திருநீர் தட்டினில்
தாங்கியே நீயும பாங்குடனடியார்
வாங்கிடத்தந்து பாங்குடனிருமென
ஓதியே நாமும உண்மையாய் மாகர்
நீதியாய்ச் செல்வோம் நீயிருமென்று
சொலலியே பகவான துரிதமாய் எழுந்து
அலலெனும் குழலார் அனைவருஞ்சூழ
அரிஹரோ எனுமொழி நிறைநிறையோங்க
திருமலைசாமியும் சென்றனர் மாதோ

முற்றிற்று.

181302

இப்புஸ்தகத்தை அச்சிடுவதற்கு பொருளுதவி செய்த கன தனவான்களின் பெயர்கள் —

பவானி தாலுகா எண்ணமங்கலம் கஸ்பாவிலிருக்கும்
மகா-ா-ஸ்ரீ கந்தசாமி கவுண்டர் குமாரர் கருப்பண கவுண்டர் [அவர்கள்
" கு ராமசாமி கவுண்டர் அவர்கள்
" மாணிக்க கவுண்டர் அவர்கள்
" பொன்னுக்கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டரவர்கள்
" P. சின்னச்சாமி கவுண்டர் அவர்கள்
" அ. சி. செம்ப முதலியார் அவர்கள்
விரால்காட்டியூர் க. சுப்பு செட்டியார் அவர்கள்
திருப்பூர் கஸ்பாவிலிருக்கும் க. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்
அம்மணிக்கவுண்டன்புதூர் பெரியசாமி கவுண்டர் மகன் குருசாமி கவுண்டர் அவர்கள்.

கூடிய சீக்கிரம் பலவர்ணமெட்டுகளுடன் இரண்டாம்பாகம் வெளிவரும்.

பவானி கோல்டன் அச்சாபீசில் அச்சுவேலைகள் பயிண்டு வேலைகள் குறித்த கெடுவில் குறைந்த சார்ஜுக்கு தற்கால நாகரீகப்படி செய்துகொடுக்கப்படும்.